CC. No. : 80/2013

தேதி : 23.04.2025

பெயர் : சத்தியமூர்த்தி

த.பெ. : கணேசன்

அ.சா : 1

**அ.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி:**

1 KA 03 MH 6078 என்ற டொயோட்டோ குவாலிஸ் வாகனத்தினை மறு பதிவிற்கு பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் அளிக்கப்பட்டு மறு பதிவு வழங்கப்பட்டுள்ளது. அதன் பதிவு எண் TN 69 T 1053 ஆகும். மறு பதிவு செய்யப்பட்ட கோப்பின் ஆவணங்கள் படிவம் 20 – 1, வாகன ஆய்வறிக்கை, மோட்டார் வாகன ஆய்வாளரால் வழங்கப்பட்டது, NA MV படிவம் 2, படிவம் 29 – 2, படிவம் 30 – 1, சேசிஸ் பென்சில் பிரிண்ட் நகல் ஒன்று, படிவம் 27 –1, படிவம் 28–2 நகல்கள், நந்தி டோயோட்டோ இன்வாய்ஸ் நகல் – , முனியசாமி அவர்களின் குடும்ப அட்டை நகல் – 1, படிவம் 60 –2, ரூ.20 உறுதி மொழிப்பத்திரத்தில் முனியசாமி என்பவரால் வழங்கப்பட்ட உறுதி மொழி ஒன்று, காவல் துறையில் இருந்து சூப்பரண்ட் ஆப் போலீஸ் அவர்களிடம் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலர், தூத்துக்குடி அவர்களுக்கு KA 03 MH 6078 வாகனத்திற்கு வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று வழங்கப்பட்ட சான்று, வட்டார போக்குவரத்து அலுவலர் தூத்துக்குடி அவர்களால் மேற்படி வாகனம் ஒப்பந்த ஊர்தியாக இயக்க வழங்கப்பட்ட செயல் முறை ஆணை கடிதம் ஒன்று, வட்டார போக்குவரத்து அலுவலருக்கு மோட்டார் வாகன ஆய்வாளரால் வழங்கப்பட்ட பொதுச்சாலையில் இயங்க தகுதி உடையது என்று வழங்கப்பட்ட சான்று ஒன்று, வாகனத்தின் புகைச்சான்று ஒன்று, வாகனத்தின் புகைப்படம் முனியசாமி நின்று கொண்டிருப்பது போல் உள்ளது, மோட்டார் வாகன ஆய்வாளர் ரெஜிஸ்டர் அத்தாரிட்டி, பெங்களூர் வெஸ்ட், அவர்களுக்கு மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை கேட்டு அனுப்பட்ட கடிதம் ஒன்று, ரங்கராவ், ஆர்.டி.ஓ, பெங்களூர் வெஸ்ட் அவர்களிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் கோவில்பட்டிக்கு உண்மை தன்மை பெறப்பட்ட கடிதம் ஒன்று (போலியானது), On IGS Only என்று ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் பெங்களூர் வெஸ்டில் இருந்து பெறப்பட்ட கவரின் நகல், KA 03 MH 6078 ஆர்.சி புத்தகத்தின் போலியான நகல் 3 பக்கங்கள், மறுபதிவு செய்வதற்கு பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் இருந்து வட்டார போக்குவரத்து அலுவலகம், தூத்துக்குடிக்கு அனுப்பட்ட நோட் சீட் நகல்கள் 4 பக்கங்கள் **ஆகியவை அ.சா.ஆ.29 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2 KA 03 MH 4078 என்ற மாருதி 800 வாகனத்திற்கு மறுபதிவு செய்ய பகுதி அலுவலகம் கோவில்பட்டியில் வழங்கப்பட்ட ஆவணங்கள் விவரம், மேற்படி வாகனம் TN 69 T 0210 என்ற வாகனமானது முனுசாமி பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கோப்பில்உள்ள படிவங்கள், படிவம் 20 – 1, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை –1, படிவம் 29 – 2, வாகனத்தின் புகைச்சான்று நகல், படிவம் 30 – 1, படிவம் 28 – 1, நிர்மல் மோட்டார்ஸ் லிமிட், பெங்களூர், வாகனத்தின் இன்வாய்ஸ் நகல் – 1, படிவம் 27 –1, முனிசாமியின் குடும்ப அட்டை நகல், படிவம் 60 –1, ராஜ்குமார் எடை மேடையின் எடை சீட்டு – 1, முனுசாமியால் வழங்கப்பட்ட ரூ.20/–க்கான உறுதி மொழிப்பத்தில் வழங்கப்பட்ட பத்திரம் ஒன்று. KA 03 MH 4078 என்ற மாருதி கார் உடன் முனுசாமி இருப்பது போன்ற புகைப்படம் ஒன்று, மோட்டார் வாகன ஆய்வாளர் மூலம் ரிஜிஸ்டரிங் அத்தாரிட்டி

பெங்களூர் வெஸ்ட் அவர்களுக்கு அனுப்பட்ட மேற்படி வாகனத்தின் உண்மை தன்மை கேட்டு அனுப்பட்ட கடித நகல் ஒன்று, நியூ இந்தியா இன்சூரன் கம்பெனியின் இன்சூரன்ஸ் செய்ததற்கான ரசீது, உதவி ஆய்வாளர் கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையம், மேற்படி வாகனத்திற்கு குற்ற வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று பெறப்பட்ட சான்று ஒன்று, படிவம் 60 –1, ரெங்காராவ், பெங்களூர் வெஸ்ட், ஆர்.டி.ஓ அவர்களிடம் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் கோவில்பட்டி அவர்களுக்கு பெறப்பட்ட உண்மை தன்மை குறித்த போலி கடிதம் ஒன்று, மேற்படி சான்று On IGS Only என்று RPAD ல் அனுப்பட்ட கவரின் நகல் ஒன்று, KA 03 MH 4078 வாகனத்தின் போலி ஆர்.சி நகல்கள் – 3 பக்கம் வட்டார போக்குவரத்து அலுவலகம், தூத்துக்குடிக்கு அனுப்பட்ட நோட் சீட் நகல்கள் 4 பக்கங்கள் ஆகியவை **அ.சா.ஆ.30 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

3 **(அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ.22 வரிசை ஆவணம் முதல் அ.சா.ஆ.30 வரிசையில் உள்ள சில ஆவணங்களில் சில ஆவணங்களின் நகல்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளதாலும் சில ஆவணங்களை அ.சா.1 ன் மூலம் குறியீடு செய்வதற்கும் எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1 நீங்கள் தற்போது முதல் விசாரணையில் ஆவணங்களை பார்த்து தான் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த பெரும்பாலான ஆவணங்கள் அசல் ஆவணங்கள் இல்லை என்றாலும் நகலிட்ட ஆவணங்கள் என்றாலும் சரிதான்.

2 அசல் ஆவணங்களை போலிசார் உங்களிடம் வாங்கிச்சென்றார்களா என்றால் பார்த்தார்கள் அவல் ஆவணங்கள் அலுவலகத்தில் உள்ளது. உங்களிடம் புலன் விசாரணை அதிகாரி மேற்படி ஆவணங்களை புலன்விசாரணைக்கு தேவை என்று எழுத்து மூலமாக கேட்டாரா என்றால் ஒரு சில ஆவணங்கள் கேட்டார்.

3 அப்படி அவர் கேட்ட ஆவணங்களை புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்தீர்களா என்றால் ஆம். புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்த ஆவணங்களுக்கு ஒப்புகை எதுவும் எழுதிக் கொடுத்தீர்களா என்றால் என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்பதற்கான பதிவுகள் அலுவகத்தில் உள்ளன.

**சாட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.